A/L சனி-ஞாயிறு
வகுப்புகள்
8-30 PHYSICS
மின்னியல்
Mr. நந்தகுமார் B.Sc.
12-30 ZOOLOGY
முளையவியல்
Mr. ஈசன் B.Sc.
BOND INSTITUTION JAFFNA.

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ. 1/-

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

A/L Day Class
(விஞ்ஞானம்)
புதிய 2.ம் பிரிவு
காலை 8-15
Bond INSTITUTION JAFFNA.

சுடர்:- 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஆு ஐப்பசி மீ 30 உ ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1406 ரபியுல் அவ்வல் பிறை 13 (16-11-1986) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர்:- 308

# ஜே. ஆரின் கொடும்பாவி எரிப்பதற்கு முஸ்தீபு

## பெங்களூரில் நேற்று மட்டும் நூறு தமிழர்கள் கைது

பெங்களூர், நவம்பர் 16

'சார்க்' மாநாட்டுக்கு வந்து சேர்ந்திருக்கும் இலங்கை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக இன்று (ஞாயிற்றுக்கிழமை) பெங்களூரில் அவரது கொடும்பாவியை எரிக்கவும், கறுப்புக்கொடிகள் கட்டவும் முஸ்தீபுகள் நடந்து வருவதாக அறிவிக்கப்படுகின்றது.

இவை பற்றிய தகவல் கிடைத்ததைத் தொடர்ந்து பெங்களூர் பொலிஸார் சுமார் நூறு தமிழர்களை நேற்றுக் கைது செய்தனர்.

பெங்களூரில் சுமார் நூறு தமிழர்கள் நேற்று சனிக்கிழமை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டதாக பெங்களூர் பொலிஸ் கமிஷனர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

பெங்களூர் முழுவதும் திரு. ஜெயவர்த்தனவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து கறுப்புக் கொடிகள் பறக்க விடப்படும். அவரின் கொடும்பாவி பெங்களூர் நகரில் வைத்து எரிக்கப்படும்—

இப்படி தமிழர் அமைப்புக்கள் அறிவித்திருக்கின்றன.

இதைத் தொடர்ந்தே பல தமிழர்கள் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் கமிஷனர் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

சார்க் உச்சி மாநாட்டில் கலந்து கொள்ளும் ஏழு நாட்டுத் தலைவர்களுக்கும் பாதுகாப்பு வழங்க 11,000 பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இவர்களுக்குத் துணையாக அதிரடிப் பொலிஸாரும் அழைக்கப்பட்டிருக்கின்றனர்.

(இ-எ)

## வீட்டுக்காவல் நீக்கப்பட்டது!

சென்னை, நவ. 16

இலங்கைத் தமிழ்ப் போராளித் தலைவர்கள் தங்கியுள்ள வீடுகளுக்கு போடப்பட்டு இருந்த பொலிஸ் காவல் நேற்று (சனி) முதல் விலக்கப்பட்டு விட்டது.

இத்தகவலை சென்னை பொலிஸ் ஆணையாளர் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

இம்மாதம் 8 ஆம் திகதி முதல் தமிழ்ப் போராளித் தலைவர்கள் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்தனர். அவர்கள் வீடுகளுக்கு பொலிஸ் காவலும் போடப்பட்டிருந்தது. (இ-எ)

## 'சார்க்' தலைமைப் பதவி: ராஜீவ் இன்று பொறுப்பேற்கிறார்

பெங்களூர், நவ. 16

தெற்காசிய நாடுகள் கூட்டமைப்பின் (சார்க்) தலைமைப்பதவியை இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி இன்று (ஞாயிறு) பொறுப்பேற்கிறார்.

இதுவரை தலைமைப் பதவியை வகித்து வந்த பங்களாதேஷ் அதிபர் ஜனாப் முகமட் எர்ஷாத் இன்று இந்தியப் பிரதமரிடம் அதனைக் கையளிப்பார்.

'சார்க்' அமைப்பில் ஏழு தெற்காசிய நாடுகள் அங்கம் வகிக்கின்றன.

இலங்கை, பங்களாதேஷ், மாலைதீவு, ஜனாதிபதிகள் மாநாட்டில் கலந்துகொள்ள பெங்களூர்

(4ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

16—11—1986

ஞாயிற்றுக்கிழமை

சுபநேரம்:

9.07 முதல் 10.37 வரை

ராகுகாலம்:

4.37 முதல் 6.07 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

பூரணை விரதம்

## ஹெலி தாக்குதலில் மயிரிழையில் தப்பிய செய்தியாளர்

யாழ்ப்பாணம், நவம்பர் 16

கடந்த வெள்ளிக்கிழமை மாலை வல்லைவெளி வீதியால் சைக்கிளில் சென்று கொண்டிருந்த உதயன் கரவெட்டிச் செய்தியாளர் ஹெலிக்கொப்டரின் தாக்குதலுக்கு ஆளாகி மயிரிழையில் உயிர் தப்பினார்,

இது பற்றிய விவரமும் செய்தியாளரின் அனுபவமும் வருமாறு:

கரவெட்டி செய்தியாளர் தனது இரண்டு சகோதரர்களுடன் சைக்கிள்களில் வல்லைவீதியாக மாவிட்டபுரம் நோக்கிச் சென்று கொண்டிருந்தார்.

இவர்கள் வல்லை ஆஸ்பத்திரிச் சந்திக்கு அருகில் சென்று கொண்டிருந்த சமயம், தொண்டமானாறு முகாமில் இருந்து வந்த ஹெலிக்கொப்டர், சிப்பாய்களினால் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்ட வல்லை பாலத்தைத் திருத்திக் கொண்டு இருந்தவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தது.

இந்தப் பாலம் முனியப்பர் கோயிலுக்கும் வல்லை ஆஸ்பத்திரிக்கும் இடையில் உள்ளது.

செய்தியாளரும் அவரின் சகோதரர்களும் சைக்கிள்களை நிலத்தில் சரபாட்டுவிட்டுப் பற்றைக்குள் பதுங்கிக் கொண்டனர்.

தாழப்பறந்து வந்த ஹெலிக்கொப்டர், பாலத்தைத் திருத்துவதில் ஈடுபட்டிருந்தவர்கள் கொண்டு வந்த டிராக்டர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தது.

அந்த ஹெலிக்கொப்டர் தரை இறங்கவும் ஒரு முறை எத்தனித்தது.

பற்றைக்குள் செய்தியாளர் ஏனையோருடன் படுத்துக் கொண்டார்.

மூன்றுவது தடவை துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு விட்டு ஹெலிக்கொப்டர் தொண்டமானாறு திரும்பியது.

செய்தியாளரின் சைக்கிள் காற்றுப்போனது. காற்றுப்போன சைக்கிளில் ஏறி கஷ்டத்துடன் செய்தியாளர் ஏனையோருடன் கல்லுவம் வீதி வழியாக ஓடிக் கொண்டிருந்த சமயம் சீபிளேன் ஒன்று அந்த இடத்துக்குப் பறந்து வந்தது.

வல்லையை இவர்கள் கடக்கும் முன்னர் மீண்டும் ஹெலிக்கொப்டர் அந்த இடத்துக்கு வந்து சேர்ந்தது. கரவெட்டிச் செய்தியாளர் வெட்ட வெளியில் அகப்பட்டுக் கொண்டார்.

தெய்வாதீனமாக அவர் தப்பி கல்லுவம் சென்றடைந்தார்.


(இ-எ-70)

### பூஸாவிலிருந்து

திருமலையைச் சேர்ந்த 126 தமிழர் பூஸாவிலிருந்து களுத்துறையில் உள்ள பெல்வத்த புனர்வாழ்வு முகாமுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். (இ-150)

### அன்னையர் முன்னணியும் உண்ணாவிரதம்

பல்கலைக்கழக மாணவன் விஜிதரன் காணமல் போனது தொடர்பாக மாணவரால் பல்கலைக்கழகத்தில் நடத்தப்பட்டு வரும் உண்ணாவிரதப் போராட்டத்தில்; அன்னையர் முன்னணிப் பிரமுகர்களும் தங்கள் ஆதரவை தெரிவிக்கும் முகமாக கலந்து கொண்டனர். (இ-5)



காணமற்போன விஜிதரனை விடுவிக்கக்கோரி யாழ் பல்கலைக்கழக மாணவர்களின் தொடர் உண்ணாவிரதத்தின் போது எடுக்கப்பட்ட படம்.

## பெங்களூர் சென்றடைந்ததும் விமான நிலைய அறையில் ஜே. ஆர். ராஜீவ் சந்திப்பு

### யோசனைகளும் மாற்றுயோசனைகளும் ஆராய்வு

பெங்களூர், நவ. 15

இனப்பிரச்சினை குறித்து இலங்கை அரசு சமர்ப்பித்துள்ள யோசனைகள், தமிழர் விடுதலைக் கூட்டணி சமர்ப்பித்துள்ள மாற்று யோசனைகள் ஆகியன நேற்று இடம்பெற்ற ஜனாதிபதி ஜெயவர்த்தன — பிரதமர் ராஜீவ் காந்தி சந்திப்பின் போது பரிசீலனை செய்யப்பட்டன.

நேற்று நண்பகல் பெங்களூர் விமான நிலையம் சென்றடைந்த ஜனாதிபதி ஜெயவர்த்தனவுடன் விமான நிலையத்தில் உள்ள விசேஷ அறையில் வைத்தே இப்பரிசீலனையை பிரதமர் ராஜீவ் காந்தி மேற்கொண்டார்.

முதல் 15 நிமிடங்கள் ஜனாதிபதியும் பிரதமரும் தனிமையில் பேசினர்.

பின்னர் உதவியாளர்களுடன் இரண்டு தலைவர்களும் 90 நிமிடங்கள் வரை பேச்சுக்கள் நடத்தினர். இப்பேச்சுக்களின் போது இந்திய தரப்பில் வெளியுறவு அமைச்சர் நாராயணன் திவாரி, இலங்கை தரப்பில் வெளியுறவுஅமைச்சர் சாஹுல் ஹமீது ஆகியோர் கலந்து கொண்டனர்

பெங்களூர் விமான நிலையம் வந்தடைந்த ஜனாதிபதி தம்பதியரை பிரதமர் காந்தி தம்பதிகள் வரவேற்றனர்.

இனப்பிரச்சினைப் பேச்சுக்கள் அதிகாரிகள் மட்டத்திலும் அமைச்சர்கள் மட்டத்திலும் நடைபெற்றன. (அ-எ)



இன்று
கார்த்திகை
தீபத்திருநாள்
* * *
குமாராலய தீபம்
சர்வாலய தீபம்



என்னத்தை எரிச்சாப்போலை என்ன, தம் இஷ்டருக்கு சுடலை ஞானமாவது பிறக்குமெண்டது சந்தேகம் தான்...!

## நாளை நடக்கும் மாபெரும் ஊர்வலம்

யாழ்ப்பாணம், நவம்பர் 16

அனைத்து மக்களும் ஒன்று திரண்டு கலந்து கொள்ளும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்று நாளை திங்கட்கிழமை யாழ் நகரில் நடைபெறும்.

இந்தியாவில் இருக்கும் தமிழ்ப் போராளிகளையும் போராளிகளின் தலைவர்களையும் இந்திய அரசு அடிக்கடி கைது செய்வதை எதிர்த்தும்—

போராளிகளிடம் இருந்து பறிக்கப்பட்ட ஆயுதங்களை திரும்ப ஒப்படைக்கும்படி கோரியும் எமது போராட்டத்தை இந்தியா அங்கீகரிக்க வேண்டும் எனக் கோரியுமே இந்த ஊர்வலம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது

ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இருந்தும் ஆரம்பமாகும் ஊர்வலங்கள் ஆரியகுளம் சந்தியை வந்தடையும்.

பின்னர் அங்கிருந்து அனைவரையும் ஒன்று சேர்ந்து பிரமாண்டமான ஊர்வலம் ஒன்றை பெரிய கோவில்வரை நடத்த ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இந்த ஊர்வலத்தில் தமிழர் கலாசார அவை, சனசமூக நிலையங்கள், பொதுஸ்தாபனங்கள் என்பனவும் கலந்து கொள்ளவுள்ளன.

(இ-10)

## 2 ஆம் கட்ட உண்ணாவிரதம் நேற்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், நவ. 16

யாழ். பல்கலைக்கழக மாணவன் விஜிதரன் தொடர்பாக பல்கலைக்கழக மாணவரால் நடத்தப்படுகின்ற போராட்டத்தின் இரண்டாம் கட்ட உண்ணாவிரதப் போராட்டம் நேற்று ஆரம்பமானது.

30 மாணவர்கள் இதில் கலந்து கொண்டனர். இவர்கள் நாளை (திங்கள்) காலைவரை உண்ணாவிரதம்இருப்பர்.

இவர்களுக்கு ஆதரவாக பல மாணவர்கள் தினமும் ஒருநாள் அடையாள உண்ணாவிரதம் இருக்கிறார்கள்.

முதலாம் கட்ட உண்ணாவிரதம் நேற்றுக்காலை விஜிதரனின் தாயாரால் முடித்து வைக்கப்பட்டது. (இ—5)

### தொண்டா சென்னையில்

அமைச்சர் தொண்டமான் தற்சமயம் சென்னையில் தங்கி இருக்கின்றார்.

இப்படி கொழும்பு வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

அமைச்சரின் சென்னை விஜயத்துக்கான காரணங்கள் இன்னும் தெரிவிக்கப்படவில்லை.

சென்னையில் இருந்து பெங்களூருக்கு விமானத்தில் செல்ல எடுக்கும் நேரம் சுமார் 45 நிமிடங்களாகும் என்பது குறிப்பிடத்தக்கது(இ-எ)

## வல்லையில் பாலம் திருத்தும் போராளிகளை நோக்கி ஹெலி தாக்குதல்

கரவெட்டி, நவ. 16

வல்லைப்பாலம் திருத்தும் போராளிகள் மீது ஹெலியில் இருந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது.

வெள்ளிக்கிழமை மாலை 5-45 மணியளவில் இச்சம்பவம் நடந்தது.

மிகவும் தாழப் பறந்த இந்த ஹெலி சில நிமிடம் இத்தாக்குதலை மேற்கொண்டது.

தாக்குதலின்போது பாலம் திருத்தும் வேலைக்கு பயன்படுத்தப்பட்ட டிராக்டர் ஒன்று சிறிது சேதம் அடைந்தது. பாலம் திருத்தும் வேலையில் ஈடுபட்டிருந்த ஈ. பி. ஆர். எல். எவ். போராளிகளுக்கு எந்தவித இழப்பும் ஏற்படவில்லை.

தாக்குதலை நடத்திவிட்டு தொண்டமானாறு இராணுவ முகாம் நோக்கிச் சென்ற ஹெலி மீண்டும் திரும்பி அப்பகுதியை வட்டமிட்டு வல்லையின் ஒரு பகுதியில் குண்டு ஒன்றை வீசி பலத்த சத்தத்துடன் வெடிக்க வைத்தது.

இதனால் புருப்பொறுக்கி, குஞ்சர்கடை, மண்டான், கல்லுவம் பகுதிகளில் பெரும் பதற்றம் நிலவியது,

இச்சம்பவங்களுக்கு மத்தியிலும் பாலம் திருத்தும் வேலை தொடர்ந்து ஈ. பி. ஆர். எல். எவ். போராளிகளால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

(இ - 70)

## ஈழத்தின் 2 ஆவது முத்திரை நேற்று வெளியிடப்பட்டது

யாழ்ப்பாணம், நவ.16

மலையக மக்களின் பிரஜா உரிமை மறுக்கப்பட்ட தினமான நேற்று மலையக மக்களுக்காக ''எழுக மலையகம்'' என்ற ஈழத்தின் இரண்டாவது முத்திரை வெளியிடப்பட்டது.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினரால் இந்த வெளியீடு நடத்தப்பட்டது.

மலையக மக்களின் வாக்குரிமைகள் பறிக்கப்பட்டு அவர்களை நாடற்றவர்களாக்கிய தினமே நேற்றைய தினம் ஆகும்.

மலையகப் பெண்மணி ஒருவர் முதுகில் கூடையுடன் தோன்றும் காட்சியை முத்திரை சித்திரிக்கின்றது.

மாத்தளை ஆர். இராஜலிங்கம் இந் நிகழ்ச்சிக்கு தலைமை வகித்து முதல் முத்திரையை மலையகத்தைச் சேர்ந்த முத்து சந்தானம் என்பவருக்கு விற்றார்.

நிகழ்ச்சியில் ஈ.பி.ஆர். எல். எப்.இயக்கப் பிரதிநிதிகள் உட்பட வேறு பலரும் உரையாற்றினார்கள்.

நிகழ்ச்சிகளின் முடிவில் ''தேசியம் பாடும் முகாரிகள்'' கவிதா நிகழ்வும் இடம் பெற்றது.

(இ-10)

### அவர்கள் தாக்கியது பழைய முகாமையே

யாழ்ப்பாணம், நவ. 16

திருகோணமலைப்பகுதியில் உள்ள கூனித்தீவு உப்புவெளி பகுதிகளுக்கு வந்த படையினர் புலிகளின் பழையமுகாம்

(4ஆம் பக்கம் பார்க்க)

### ★ பொது மக்களையும் கூட்டிச் சென்றனர்

வல்வெட்டித்துறை, நவ. 16

வீடுகளில் பதுங்கி இருந்து புலிகளின் தாக்குதலுக்கு நின்று பிடிக்க முடியாது வல்வெட்டித்துறை முகாம் திரும்பிய சிப்பாய்கள் தம்முடன் சில பொது மக்களையும் கூட்டிச் சென்றுள்ளனர் என்று தெரிகிறது.

சிப்பாய்கள் வல்வெட்டித்துறை முகாமுக்கு கடற்கரை மார்க்கமாகவே திரும்பிச் சென்றனர்.

சிப்பாய்கள் பதுங்கி இருப்பது தெரியாது தமது வீடுகளுக்குச் சென்றவர்கள் சிலரும் பிடிபட்டவர்களில் அடங்குவர். (இ-160)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செய்திக்கொத்து

### தீவுப் பகுதியில் சின்னவெங்காயம்

யாழ்ப்பாணம், நவ.16

தீவுப்பகுதியில் சின்ன வெங்காயப் பயிர்ச் செய்கை அதிகரித்துள்ளது என பயிர்ச் செய்கை உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார்.

புங்குடுதீவு, நயினாதீவு, நாரந்தனை பகுதிகளிலேயே அதிகளவு சின்ன வெங்காயம் செய்கை பண்ணப்படுகிறது.

இம்முறை பெய்துள்ள மழை சின்ன வெங்காயச் செய்கைக்கு ஏற்றவாறு அமைந்துள்ளது என்றும் அவர் சொன்னார். (இ-5)

### பழைய மாணவர் சங்கம் அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், நவ.16

கொடிகாமம் அரசினர் திருநாவுக்கரசு மகாவித்தியாலய 'பழைய மாணவர் சங்கஅங்குரார்ப்பணக்கூட்டம் அதிபர் திரு.க. பேரம்பலம் தலைமையில் எதிர்வரும் 22ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9-30மணியளவில் வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும். (இ)

### வை.டபிள்யூ.சி.ஏ. சாதனை

யாழ்ப்பாணம், நவ.16

இலங்கை வை.டபிள்யூ.சி.ஏ இனால் நடத்தப்பட்ட தையல்கண்காட்சியில் யாழ். வை.டபிள்யூ.சி.ஏ. முதலாம் இரண்டாம் மூன்றும் இடங்களைப் பெற்று மொத்தம் ஒன்பது பரிசில்களைப் பெற்றது.

இப்பரிசில்கள் நெதர்லாந்து தூதுவரால் வழங்கப்பட்டன. (இ)

### கருத்தரங்கு

யாழ்ப்பாணம், நவ.16

நாளை வைத்தீஸ்வராக் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் செல்வன் க. அருந்தவராஜா தலைமையில் நடைபெறவிருக்கும் மாணவ மன்றத்தின் சிறப்புக் கூட்டத்தில் மெய் இயல் துறை தலைவர் கலாநிதி திரு. கிருஷ்ணராஜா விஞ்ஞான முறைஇயல்என்ற தலைப்பில் விரிவுரையாற்றவுள்ளார் நகரில் உள்ள ஏனையபாடசாலைமாணவ மாணவிகளும் இவ்வைபவத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (இ)

பாடசாலைகளில்

# அடுத்த வருட வேலைத்திட்டம் கோருகிறார் பணிப்பாளர்

மானிப்பாய், நவ. 16

1987 ஆம் ஆண்டில் பாடசாலைகளில் அமுலாக்கப்பட இருக்கும் வேலைத்திட்டம் பற்றிய அறிக்கைகளை 1987 ஜனவரி 10 ஆம் திகதிக்குள் ஆரம்ப பாடசாலைகள் வட்டாரக் கல்விஅதிகாரிகளுக்கும்–

ஏனைய பாடசாலைகள் வட்டாரக் கல்வி அதிகாரியூடாக தமக்கும்– அனுப்பிவைக்குமாறு யாழ்ப்பாணம் கல்விப் பணிப்பாளர் திரு. ஆர். சுந்தரலிங்கம் அறிவித்துள்ளார்.

பின்வரும் நோக்கங்களை முதன்மை இலக்குகளாகக் கொள்ள வேண்டும் என்று கல்விப் பணிப்பாளர் தமது அறிவுறுத்தலில் வலியுறுத்தியுள்ளார்.

✱ 1987ஆம் ஆண்டை தொழில்நுட்ப ஆண்டாகக் கொண்டு பாடசாலைகளில் தொழில் நுட்பப் பாடத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து தொழில் நுட்ப பாடங்களை ஊக்கமாகவும் ஆக்கமாகவும் கற்பித்தல். மாணவர்கள் தாமாகஆக்கும் பொருள்களை காட்சிக்கு வைத்து விற்பனைசெய்தல்: சிறந்த ஆக்கங்களுக்கு பாராட்டு பரிசுகள் வழங்கல்.

✱ கவின்கலை கற்பதற்கு ஊக்கமளித்தல், மாவட்ட கலை இலக்கிய குழு அமைத்து மாணவர்களின் கவின்கலை திறனை விருத்தி செய்தல், நாடகங்களை நடித்து மேடையேற்றல்.

✱ பாடசாலை அபிவிருத்திசபையின் உதவியுடன் பாடசாலைகளின் வளர்ச்சிக்கு நிதி சேகரித்தல்.

✱ பொதுக் கல்வியில் பங்குபற்றுவோர் வீதத்தை அதிகரித்தல்.

✱ பாடசாலைகளில் வகுப்பேற்றம் பெறாது இருக்கும் மாணவர்களின் எண்ணிக்கை 1983 ஐ விட 1985 இல் அரைவாசியாக குறைந்துள்ளது இதனை மேலும் குறைப்பதற்கு சாவகச்சேரி, வட்டுக்கோட்டை, புங்குடுதீவு, கோப்பாய் ஆகிய வட்டாரங்களில் விசேஷ பரிகாரக் கற்பித்தலை மேற்கொள்ளல்.

✱ பொதுக் கல்வியை முழுமையாகப் பெறாது இடையில் பாடசாலையை விட்டு விலகுவோரின் எண்ணிக்கையை குறைத்தல்.

✱ ஆண்டு 7, 12 இன் எண்ணிக்கையை தேவைகளுக்கேற்ப அதிகரித்தல்

✱ பாடசாலைகளில் தாவரங்கள் நடல் பாடசாலை பூந்தோட்டம்

✱ மாணவரின் அறிவு ஆற்றல், பேச்சு, எழுத்து வன்மைகளைவெளிப்படுத்தல். (இ-90)

## 37 இலங்கையரும் கெய்ரோவிலேயே இன்னும் தடுத்து வைப்பு!

கெய்ரோ, நவ.16

அரசியல் தஞ்சம் மறுக்கப்பட்ட நிலையில் கிரேக்கம், டென்மார்க் ஆகிய நாடுகளில் இருந்து திருப்பி அனுப்பப்பட்ட 37 இலங்கைத் தமிழர் இன்னும் கெய்ரோவில் தான் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பில் இருந்து ஏதென்ஸுக்கும் ஏதென்ஸில் இருந்து கெய்ரோவுக்கும் இத்தமிழர்களைக் கொண்டு வந்திறக்கிய விமான சேவைகளே இவர்களை மீண்டும் ஏற்றிச் செல்ல வேண்டும் என்று கெய்ரோவில் உள்ள இலங்கைத் தூதரகம் அறிவித்துள்ளது.

கிரேக்க நாட்டைச் சேர்ந்த ஒலிம்பிக் விமான சேவை பாகிஸ்தான் சர்வதேச விமான சேவை ஆகியவற்றைச் சேர்ந்த விமானங்களே இந்த 37 இலங்கைத் தமிழர்களையும் கொழும்பிலிருந்து ஏதென்ஸுக்கும் ஏதென்ஸில் இருந்து கெய்ரோவுக்கும் கொண்டு சென்றன. (இ-எ)

## தீவிரவாதிகளின் இணக்கமின்றி சமாதானம் காணமுடியாது

அமைச்சர் லலித் அத்துலத்முதலி சொன்னார். (இ-எ)

### பட்ஜட் விவாதத்தில் அத்துலத் உரை

கொழும்பு, நவ.16

தீவிரவாதிகளின் இணக்கம் இன்றி சமாதானம் காணமுடியாது.

இப்படி தேசியப் பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி சொன்னார்.

நாடாளுமன்றத்தில் வரவு செலவுத்திட்ட விவாதத்தை எதிர்க்கட்சியின் தரப்பில் அத்தனகலை எம்.பி. திரு. லக்ஷ்மன் ஜயக்கொடி தொடக்கி வைத்துப் பேசினர்.

1977 இல் நாட்டின் வெளிநாட்டுக் கடன் ஆயிரம் கோடி ரூபா வரையில் தான் இருந்தது.

ஆனால் 1984 இல் வெளிநாட்டுக் கடன் 5,000 கோடி ரூபாவாக அதிகரித்தது.

அரசாங்கத்தின் திட்டமிடப்படாத பொருளாதாரக் கொள்கையே இதற்குக் காரணமாகும்— என்று திரு. லக்ஷ்மன் ஜெயக்கொடி சொன்னார்.

அரசு தரப்பில் விவாதத்தை ஆரம்பித்துப் பேசுகையில் தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி சொன்னதாவது;

ஒரு பகுதியினால் மட்டும் நாட்டில் சமாதானத்தைக் கண்டுவிட முடியாது. தீவிரவாதிகளும் இணங்கி வந்தால் மட்டுமே நாட்டில் சமாதானத்தைக் காண முடியும்.

1977 இல் நாட்டின் பாதுகாப்புச் செலவினம் 91 கோடி ரூபாவாகவே இருந்தது.

1987இல் இந்த செலவினம் 1060 கோடி ரூபாவாக அதிகரிக்க உள்ளது— இப்படி


### அறிவித்தல்

யாழ். சைனீஸ் றெஸ்ரோறண்ட்

முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

பலரின் வேண்டுகோளுக்கு இணங்க இத்தாபனம்

இரவு 8-30 மணி வரை திறந்திருக்கும்

தொலைபேசி: 23460


## மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

### விவசாயக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், நவ. 16

பழமரச் செய்கையும் பரிபாலனமும் என்ற தலைப்பிலான கருத்தரங்கு யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனத்தின் ஆதரவில் நிறுவனத்தில் இம் மாதம் 24 ஆம் திகதி காலை நடைபெறும்.

திரு சி. ஜெயரத்தினம் தலைமை வகிப்பார்.

வாழை, மாமரச் செய்கையும் பரிபாலனமும் என்ற தலைப்பில் கிளிநொச்சி பிராந்திய ஆராய்ச்சி நிலையப் பிரதிப் பணிப்பாளர் திரு. பி. என். எமெர்ஸன்; பப்பாசி, தோடை, எலுமிச்சை வகைப் பயிர்ச் செய்கையும் பரிபாலனமும் என்னும் பொருள் பற்றி ஆராய்ச்சி உத்தியோகத்தர் செல்வி எஸ்.சுந்தரலிங்கம் ஆகியோர் கருத்துரை வழங்குவர்

## வெளிவாரி பட்டதாரி பரீட்சை யாழ்மாவட்டத்திலும்

யாழ்ப்பாணம், நவ.16

வெளிவாரிப் பட்டதாரிகளுக்கான பரீட்சையை இம்முறை யாழ் மாவட்டத்திலும் நடத்த உயர்கல்வி அமைச்சின் செனட் முடிவு செய்துள்ளது.

இலங்கை ஆசிரியர் காங்கிரஸ் அமைச்சர் தொண்டமான் ஊடாக உயர் கல்வி அமைச்சுச் செயலாளர் கலாநிதி கல்பகேக்கு விடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்து இந்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

இப் பரீட்சை 1983 ஜூலை கலவரத்தின் பின்னர் யாழ்மாவட்டத்தில் நடத்தப்பட இருப்பது இதுவே முதல்தடவை.

யாழ் மாவட்டத்தில் இப்பரீட்சையை நடத்துவது சம்பந்தமான ஒழுங்குகள் பற்றி இலங்கை ஆசிரியர் காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு. க. சிவஞானம் தலைமையிலான தூதுக்குழு யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் வித்தியானந்தனைச் சந்தித்து பேச்சுக்கள் நடத்தியது.

இதுசம்பந்தமாக உயர் கல்வி அமைச்சு அதிகாரிகளை இம்மாதம் 20ஆம் திகதிக்கும் முன்னர் சங்கத் தூதுக்குழு மீண்டும் சந்திக்கும் என்று பொதுச் செயலாளர் திரு. க.சிவஞானம் தெரிவித்தார், (இ-எ)

### விஜிதரன் விவகாரம்: ஈ. பி. ஆர். எல். எப். பதில் அறிக்கை

யாழ்ப்பாணம், நவ. 16

பல்கலைக்கழக மாணவன் விஜிதரன் கடத்தல் சம்பவம் தொடர்பாக நிர்வாக ஒழுங்குகள் ஊடாக மாணவர் அமைப்புக்குழுவால் கொடுக்கப்பட்ட அறிக்கைக்கு ஈழமக்கள் புரட்சிகர விடுதலைமுன்னணிபதிலறிக்கை விடுத்திருக்கிறது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இக் கடத்தலுக்கும் எமக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்பதை. மீண்டும் உறுதியாகத் தெரிவிக்கிறோம். இவ் விடயத்தில் நாமும் மாணவர்களாகிய உங்களுடன் இணைந்து விஜிதரன் விடுவிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறோம்.

இக் கடத்தலில் சம்பந்தப்பட்டவர்கள் தம்மை உரிமை கோருவதுடன், கடத்தப்பட்டதற்கான காரணங்களையும் பகிரங்கமாக முன்வைக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறோம்.

இதற்காக மாணவர் அமைப்புக் குழுவினால் நடத்தப்படும் நியாயமான போராட்டங்களுக்கு எமது ஆதரவைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

சித்தாந்த ரீதியாக முரண்பட்ட வெவ்வேறு அரசியல் போக்குடையவர்கள் என்பதற்காக எவர் மீதும் பலாத்காரம் மேற்கொள்வதை நாம் வன்மையாக எதிர்க்கிறோம்.

- இப்படித் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

### நீதிபதிகளை ஏன் கடவுளாக மதிக்கிறோம்?

சுன்னாகம், நவ.16

நீதி கேட்கும் உரிமை மக்களுக்கு உள்ளது. ஆனால் நீதியை வழங்குபவன் கடவுள் ஒருவரே தான். அதனால் தான் நீதிபதிகளை கடவுளாக மதிக்கிறோம். போற்றுகிறோம்.

சுன்னாகம் பிரஜைகள் குழு தலைவரும் முன்னாள் கல்விப்பணிப்பாளருமான திரு. தி. மாணிக்கவாசகர் இவ்வாறு குறிப்பிட்டார்.

வேலணை ஆரம்பநீதி மன்றத்தின் நீதிபதியாக நியமனம் பெற்றுள்ள திரு. பூதப்பிள்ளை சதாசிவரத்தினத்துக்கு சுன்னாகம் பொதுமக்கள் அளித்த இராப்போசன விருந்தில் தலைமையுரையாற்றும்போது திரு. மாணிக்கவாசகர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

சுன்னாகம் ப.நோ.கூ. சங்கத்தலைவர் திரு.எஸ். குமாரவேல் பேசுகையில் பல அறிஞர்களையும், [illegible] கிய சுன்னாகம், நீதிபதி ஒருவரை உருவாக்கவில்லையே என்ற குறை திரு சதாசிவரத்தினம் நீதிபதியாக நியமனம் பெற்றதால் நிவிர்த்தியாகிறது என்றார்.

திரு. நாவேந்தன் திருநாவுக்கரசு, சுன்னாகம் பங்குத்தந்தை அருட்திரு. யோகராஜா அடிகளார் ஆகியோரும் பேசினர்.

பதிலுரை நிகழ்த்திய நீதிபதி திரு. சதாசிவரத்தினம் எனக்கு கிடைத்த பேறுகள் பெருமைகள் யாவும் சுன்னாகம் மக்களுக்கே உரித்துடையன என்றார்.

வைத்திய கலாநிதி ஜி. ஜோஜ், முன்னாள் மரக்கூட்டுத்தாபன முகாமையாளர் திரு. இளையதம்பி, திரு. ஆசீர்வாதம் ஹென்றி, யாழ். இலங்கைவங்கி உதவி முகாமையாளர் திரு. கே. சிவசுப்பிரமணியம், சட்டத்தரணி சிவஞா[illegible] உரையாற்றினர். (இ-27)

### கருத்தரங்கு

யாழ்ப்பாணம், நவ. 16

சங்கானை ஆஸ்பத்திரி அபிவிருத்திக் கருத்தரங்கு எதிர்வரும் சனிக்கிழமை(22-11-86)காலை வைத்தியசாலை மண்டபத்தில் டாக்டர் எம். ஏ. இராசரத்தினம் தலைமையில் நடைபெறும்.

யாழ் மாவட்ட சுகாதார சேவை பணிப்பாளர் டாக்டர் என். கனகசபை பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார். (இ-எ)

## விளையாட்டரங்கு

### மாணவர் முன்னணி நடத்திய விளையாட்டுப் போட்டிகள் முடிவுற்றன

யாழ்ப்பாணம், நவ. 19

கடந்த 12ஆம் திகதி மாணவ முன்னணியினால் உதைபந்தாட்ட, வலைப்பந்தாட்ட இறுதிப் போட்டிகள் நடைபெற்றன உதைபந்தாட்டப் போட்டியில் 22 பாடசாலைகள் கலந்து கொண்டன.

இறுதிப் போட்டியில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியும் யாழ் சென்ஜோன்ஸ் கல்லூரியும் மோதின. பண்டிதர் ஞாபகார்த்த சுற்றுக் கிண்ணத்துக்காக நடைபெற்ற இப் போட்டியில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மிகவும் விறுவிறுப்பாக விளையாடிய போதிலும் இறுதி நேரத்தில் சென்ஜோன்ஸ் கல்லூரி 1-0 கோல்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று, பண்டிதர் ஞாபகார்த்த சுற்றுக்கிண்ணத்தைப் பெற்றுக் கொண்டது.

இரண்டாவது இடத்தை ஸ்கந்தவரோதயாக் கல்லூரியும், மூன்றும் இடத்தை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியும் பெற்றுக் கொண்டன.

வலைப்பந்தாட்டப் போட்டியில் 28 பாடசாலைகள் கலந்து கொண்டன. இறுதிப் போட்டியில், உடுவில் மகளிர் கல்லூரியும், சுண்டிக்குளி மகளிர் கல்லூரியும் மோதின.

''விக்ரர்,' ஞாபகார்த்த சுற்றுக்கிண்ணத்துக்காக நடைபெற்ற இப்போட்டியில் இரண்டு கல்லூரிகளும் மிகவும் விறுவிறுப்பாக விளையாடிய போதிலும் சுண்டிக்குளி மகளிர் கல்லூரி வெற்றி பெற்று ''விக்ரர்'' ஞாபகார்த்த சுற்றுக் கிண்ணத்தைப் பெற்றுக் கொண்டது.

இரண்டாம் இடத்தை உடுவில் மகளிர் கல்லூரியும், மூன்றும் இடத்தை திருக்குடும்ப கன்னியர் மட ஆங்கிலப் பாடசாலையும் பெற்றுக் கொண்டன.

இவ் வைபவத்திற்கு பிரதம விருந்தினராக யாழ் சம்பத்திரிசியார் கல்லூரி அதிபர் வண பிதா மைக்கல் ஜோசப் கலந்து கொண்டு ஆசியுரை வழங்கி பரிசில்கள் கொடுத்தார்.

இப்போட்டிகளுக்கு ஒத்துழைப்பு நல்கிய சகல பாடசாலைகளுக்கும் பரிசில்களை அன்பளிப்புச் செய்த ஸ்தாபனங்களுக்கும், விளையாட்டுப் போட்டிகளுக்கு நடுவர்களாகப் பணிபுரிந்தவர்களுக்கும், மற்றும் உதவிகள் செய்த ஏனையோருக்கும் மாணவர் முன்னணி நன்றி தெரிவிக்கிறது. (இ)

### ரேடியோ, ரி வி, டெக் அனுமதிப் பத்திரம்

யாழ்ப்பாணம், நவ. 16

1987 ஆம் ஆண்டுகளுக்குரிய வானொலி, தொலைக்காட்சி, டெக் அனுமதிப்பத்திரங்கள் நாளை 17 ஆம் திகதி முதல் விநியோகிக்கப்படுகின்றன.

இது தொடர்பாக ஈ. பி. ஆர். எல். எவ். விடுத்த அறிக்கை வருமாறு:-

வானொலி, தொலைக் காட்சிப்பெட்டி, டெக் ஆகியவற்றிற்கான 1987 ஆம் ஆண்டுக்குரிய அனுமதிப் பத்திரங்கள் எம்மால் 17-11-86 இல் இருந்து விநியோகிக்கப் படவுள்ளது.

யாழ் குடாநாட்டில் சகல டெலிவரி நடக்கும் தபாற்கந்தோர்களிற்கு முன்னாலும் வேலை நாட்களில் இந்த அனுமதிப் பத்திரங்களை எமது பிரதிநிதிகளிடமிருந்து பெற்றுக் கொள்ளளாம்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் மேற்படி பிரதேசங்களிலுள்ள எமது ஸ்தாபன அலுவலகங்களிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

நாம் முன்னர் அறிவித்துள்ளவாறு அனுமதிப் பத்திரங்கள் பெறும் முடிவு திகதி 31-12-86 ஆகும்.

எனவே நகல பாவனையாளர்களையும் இம் முடிவுத் திகதிக்குள் தவறாமல் அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.) (இ

### பண்டிதமணி பெயரில் வீதி, நூல் நிலையம், பாடசாலை

யாழ்ப்பாணம், நவ. 14

பண்டிதமணி சி.கநூல் நிலையம், பண்டிதமணி சி.க பாலர் பாடசாலை, பண்டிதமணி சி.க. வீதி ஆகியன இன்று ஞாயிற்றுக்கிழமை தனங்கிளப்பில்திறக்கப்படவுள்ளன.

இது சம்பந்தமானவைபவங்களில் நல்லை ஆதீன முதல்வர், சாவகச்சேரி உதவி அரச அதிபர்,சாவகச்சேரி வட்டாரக் கல்வி அதிகாரி சர்வோதய அமைப்பாளர், காந்திய சேவா சங்க அமைப்பாளர், குருகுல அதிபர் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்க இருக்கின்றனர்.

பண்டிதமணியின் பிறந்த ஊர் தளங்கினப்பு.

பண்டிதமணியின் பெயரில் நடைபெறும் நல்ல காரியங்களுக்கு தனங்கிளப்பு மக்கள் தங்கள் பங்கை பிடியரசித் தருமம், தரும் உண்டியல் மூலம் உதவி வருகிறார்கள். (இ-எ)


### வெளிவாரிப் பட்டப்படிப்புகள் கல்வியாண்டு 1987/88

இலங்கைப் பல்கலைக்கழகங்களின் வெளிநிலைப் பாடநெறிகளான

கலைமாணி B.A., விஞ்ஞானமாணி B.Sc. வணிகமாணி B. Com.

க. பொ. த. உயர்தரம் 3 பாடங்களில் சித்தி அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம். விண்ணப்ப முடிவுத் திகதி 23-11-1986வரை நீடிக்கப்பட்டுள்ளது.

விபரங்களையும், விண்ணப்பப் படிவத்தினையும் ரூபா 10/- செலுத்தி நேரில்/தபால் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

வெளிவாரிப் பட்டப் படிப்புக்களுக்கென தனித்துவமான நிறுவனம்.

விபரங்களுக்கு:

உதவிப் பதிவாளர்,

பட்டப்படிப்புகள் கல்லூரி,

148/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.



நிதித் துறையில் நாணயம் மிக்க நண்பன்

ஷப்ரு

நம்பிக்கையுடன் சேமிக்க உங்கள் தோழனின் உதவியை நாடுங்கள்!

Your Friends in Finance

★ ஷப்ரு ★

யுனிக்கோ பினன்ஸ் லிமிட்டெட்

SHABRA

UNICO FINANCE LIMITED


Digitized by Noolaham Foundation noolaham.org | aavanaham.org

## உதய சங்கற்பம்

ஒழுங்கில்லாதவருக்கு புத்தி சொல்லுங்கள். திடனற்றவர்களைத் தேற்றுங்கள். பலவீனரைத் தாங்குங்கள், எல்லாரிடத்திலும் நீடிய சாந்தமாயிருங்கள்.

—பைபிள்

உதயன்

இல. 15, 2வது ஒழுங்கை மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். [தொலைபேசி: 24805 22073

16-11-1986 த. பெ. இல.23

# ஒற்றுமை நீங்கின்........

மலையகம் வாழ் தமிழ் மக்களின் - தோட்டத் தொழிலாளர்களின் பிரசா உரிமையும் வாக்குரிமையும் பறிக்கப்பட்ட நாள் நேற்று நினைவு கூரப்பட்டது.

1948 நவம்பர் 15 இல் நடந்த உரிமைப் பறிப்பைக் கண்டித்து நேற்றுக் குடாநாட்டின் பல பகுதிகளிலும் பொதுக்கூட்டங்கள் நடத்தப்பட்டன. ஈழவர் முன்னணி அவற்றை ஏற்பாடு செய்து நடத்தியது.

மலையகத் தமிழரின் கஷ்டங்களையும், பல உரிமைகள் பறிக்கப்பட்டு அவர்கள் அடக்கி ஒடுக்கப்பட்டுள்ளதையும் வடக்கு, கிழக்கு மக்கள் மத்தியில் பிரபல்யப்படுத்தும் முயற்சி வரவேற்கத் தக்கது.

இலங்கை சுதந்திரம் அடைந்த - பிரிட்டிஷ்காரரிடம் இருந்து விடுதலைபெற்ற - ஆறுமாத காலத்தில் மலையகத் தமிழர்களின் பிரசா உரிமையும், வாக்குரிமையும் பறிக்கப்பட்டன. அது இலங்கை வாழ் தமிழர் அனைவரதும் உரிமைகள் மீது அறையப்பட்ட முதலாவது அடியாக இருந்தது. அதனை உணர்ந்து தமிழ்த் தலைவர்கள் சிலர் எதிர்ப்புக் குரல் - கண்டனக் குரல் கொடுத்த போதும் அது பலனளிக்கவில்லை.

அன்று மலையகத் தமிழரின் உரிமைகளில் கை வைக்கத் தொடங்கிய சிங்களப் பேரினவாதம் இன்று இலங்கை வாழ் சகல தமிழர்களினதும் உரிமைகளில் கை வைத்துள்ளது.

இங்கு ஒன்றை முக்கியமாகக் கவனிக்க வேண்டி உள்ளது.

மலையகத் தமிழர்கள் தங்கள் சகோதரர்கள் என்ற எண்ணம் வடக்கு, கிழக்கில் வாழும் தமிழர்களுக்கு நீண்ட காலமாக ஏற்படவில்லை.

நாம் உண்டு நம் பாடு உண்டு; கிடைக்கும் சில சலுகைகளை வாங்கிக் கொண்டு வாய்ப்பு வசதியுடன் வாழ்ந்து விடுவோம்; மலையகத்தவரைப் பற்றி நாம் ஏன் கவலைப்பட வேண்டும் என்று குறுகிய வட்டத்திற்குள் நின்றவர்கள் எமது வடக்குக் கிழக்கார்.

ஏன், எம்மிற் சிலர், சிங்களவரோடு சேர்ந்து மலையகத் தமிழர்களை வெறும் கூலிகளாகக் கருதியதும் உண்டு. அவர்களை மூன்ருந்தரப் பிரசைகளாக நடத்தியதும் உண்டு.

கல்வி கேள்விகளில் சிறந்தவர்கள் என்றும் பெரும் பதவிகளை வகித்தவர்கள் என்றும் செல்வாக்கு உள்ளவர்கள் என்றும் பெருமை பேசியதோடு நின்றுவிட்டார்கள். மொழியால், கலாசாரத்தால், பண்பாட்டால், இரத்தத்தால் சகோதரர்களாகிய மலையகத் தமிழர்களின் வாழ்க்கையை ஏறெடுத்துப் பார்க்கவும் தவறிவிட்டனர் வடக்குக் கிழக்குத் தமிழர்.

அப்போது மலையகத் தமிழர்களுக்கு ஏற்பட்ட அதே அரசியல் அநாதை நிலைமை இப்போது எல்லாத் தமிழர்களுக்கும் ஏற்பட்டு விட்டது. அநாதைகள் மட்டுமன்றி அகதிகளாகும் கேவலமும் வடக்குக் கிழக்கில் உருவாகி இருக்கிறது.

மலையகத்தில் நிலைமை இப்போது ஏதோ சீர்திருந்தி விட்டதாக எண்ணக் கூடாது. ஒப்பந்தங்கள் மூலம் மலையகத் தமிழர்களில் அறுபது சதவீதமானோருக்குப் பிரசா உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. மிகுதிப்பேர், காலங் காலமாக— நான்கு ஐந்து பரம்பரையாக —தமது இரத்தத்தைச் சிந்தி வளமாக்கிய மலையக மண்ணை விட்டு இந்தியாவுக்கு கப்பலேற்றப்பட்டு விட்டார்கள்.

மலையகத் தமிழர்கள் இன்னமும் லயன்களிலேயே வாழ்கிறார்கள். சுகாதார கல்வி வசதிகளிலும் பெரிதாக மாற்றம் எதுவும் இல்லை.

அவற்றுக்கும் மேலாக ஆண்டாண்டு காலமாக அவர்கள் வாழ்ந்த பகுதிகளில் இருந்து வேறு இடங்களுக்கு விரட்டப்படுகிறார்கள். தேயிலை, றப்பர் தோட்டங்களைத் துண்டு போட்டும், மாற்றுப் பயிர்ப் பிரதேசங்களாக மாற்றியும் வெளியார் குடியேற்றப்படுகிறார்கள்.

கிழக்கில் நடந்த திட்டமிட்ட குடியேற்றம் மலையகத்திலும் இப்போது மிகவேகமாக நடக்கிறது. மலையகத் தமிழர்கள் தங்களுக்குச் சொந்தம் என்றோ பாரம்பரிய பூமி என்றோ எந்த இடத்தையும் உரிமை கோரவைக்கக் கூடாது என்ற சூழ்ச்சியுடன் குடியேற்றமும் வெளியேற்றமும் கட்டாயப்படுத்திச் செய்யப்படுகிறது.

அது சரியாக நடப்பதை நிச்சயப்படுத்திக் கொள்ள இராணுவ முகாம்கள் முளைத்துள்ளன.

தமிழர்கள் எங்கிருந்தாலும் அடக்கி, ஒடுக்கி உரிமைகளைப் பறித்து அடிமைகளாக்க வேண்டும் என்ற சிங்களப் பேரினவாதம் இப்போது திறம்பட இயங்குகின்றது.

இதனை முறியடிப்பதற்கு இலங்கை வாழ் சகல தமிழர்களதும் கூட்டு முயற்சி தேவை. அடக்குமுறைக்கு எதிராக கூட்டுப்போராட்டம் அவசியம்.

மொத்தத்தில் தமிழர்கள் எல்லோருக்குமே இடுக்கண் வந்துவிட்டது. இப்போதாவது பிரதேச, வர்க்க வேறுபாடுகளைக் களைந்து ஒருவருக்கு மற்றவர் உதவியாக ஒற்றுமைப்படாவிடில் தமிழர் சமுதாயத்துக்கு வீழ்ச்சியே அன்றி உயர்ச்சி கிடையாது.

ஒன்று பட்டால் உண்டு வாழ்வு; ஒற்றுமை நீங்கின் அனைவர்க்கும் தாழ்வு—அதை ஒவ்வொரு தமிழனும் மறக்கக் கூடாது.

சர்வதேச

# பயங்கரவாதத்திற்கு சிரியா ஆதரவு

## அமெரிக்காமீண்டும் கண்டனம்

வாஷிங்டன், நவ, 15

சர்வதேச பயங்கரவாதத்திற்கு சிரியா தொடர்ந்தும் ஆதரவு அளித்துவருகின்றது.

இதனால் மேலும் தடைகளை சிரியாவிற்கு விதிக்க வேண்டிய நிர்ப்பந்தம் அமெரிக்காவிற்கு எழுந்துள்ளது என வெள்ளைமாளிகை தெரிவித்தது.

கடந்த மூன்று வருட காலத்தில் இடம் பெற்ற 50 பயங்கர வாதச் சம்பவங்களை சிரியாவுடன் தொடர்புபடுத்தி அமெரிக்கா தகவல் வெளியிட்டுள்ளது.

இவை அனைத்துமே சிரியாவின் நேரடியான அல்லது மறைமுகமான தொடர்பை ஊர்ஜிதம் செய்வதாக அமைந்துள்ளதென அந்த தகவலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த பயங்கரவாத நடவடிக்கைகளால் சுமார் 500க்கு மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர். பல்லாயிரக் கணக்கானவர்கள் உயிர் இழந்துள்ளனர்.

சிரியாவுடன் வர்த்தக தொடர்புகளை துண்டிக்குமாறு அமெரிக்க வர்த்தக விமானநிறுவனங்கள் கோரப்பட்டுள்ளன. (ஒ)

## தென் ஆபிரிக்க விமான சேவை தடை

வாஷிங்டன், நவ.16

கடந்த மாதம் அமெரிக்க காங்கிரஸ் எடுத்த முடிவின்படி அமெரிக்க அரசாங்கம் தென் ஆபிரிக்கா மீது சிலதடை நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது.

இதன் முதற் கட்டமாக அமெரிக்காவிலிருந்து தென்ஆபிரிக்கா செல்லும் சகல விமான சேவைகளும் ரத்துச் செய்யப்பட்டுள்ளன. அதேபோல தென் ஆபிரிக்காவிலிருந்து அமெரிக்கா வரும் விமானங்களுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது

இன்று ஞாயிற்றுக் கிழமை முதல் செயற்படவுள்ள இத்திட்டத்தால் தென் ஆபிரிக்க விமானசேவை பெரும் பாதிப்படையும். இச்சேவை வருடமொன்றிற்கு சுமார் ஒரு லட்சம் பயணிகளை இரு நாடுகளுக்கிடையேயும் சுமந்து செல்கின்றது.

அமெரிக்காவின் இந்தத் தீர்மானத்தை எதிர்த்து இந்த விமான சேவை அமெரிக்க நீதி மன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளது. (ஒ)

வெளி உலகில்

## தைவானில் பூமியதிர்ச்சி

தைப்பே, நவ.15

பலத்த பூமியதிர்ச்சிக்கு தைவான் தீவு இலக்காகியது.

இதனால் சுமார் 11 பேர்வரையில் மரணமாகியிருக்கலாம் என ஊர்ஜிதமற்ற செய்திகள் தெரிவித்தன.

தலைநகரான தைப்பேயில் பல பாரிய கட்டடங்கள் தரைமட்டமாகியுள்ளன. (ஒ)

## பயங்கரவாதி யார்?
### வெளிநாட்டமைச்சர்கள் மயக்கம்

பெங்களூர், நவ.15

பயங்கரவாதி என்பது யார் என்பதற்கான விளக்கம் அளிப்பதில் ஏகமனதான முடிவு வரவில்லை.

நேற்று நடைபெற்ற சார்க் மாநாடு வெளிவிவகார அமைச்சர்கள் மாநாட்டில் இந்தநிலை ஏற்பட்டது.

ஒரு நாட்டிலிருந்து இன்னொரு அங்கத்துவ நாட்டிற்கு பயங்கரவாதிகள் செயற்படுவது தடுக்க வேண்டும். பயங்கரவாதத்துடன் தொடர்புடைய மூன்று பிரதான அம்சங்கள் குறித்து சார்க் அணியின் ஆய்வு குழுவொன்று சிபார்சுகளைத் தெரிவித்துள்ளது.

அமைப்பின் அங்கத்துவ நாடுகள் சகல விதமான பயங்கரவாத நடவடிக்கைகளையும் குற்றச் செயல்களாகக் கணிக்க வேண்டும். ஒவ்வொரு அங்கத்துவ நாடுகளும் அதன் எல்லைக்குள் இருந்து இன்னொரு அங்கத்துவ நாட்டிற்கு எதிராக பயங்கரவாதிகள் செயற்படுவதை அனுமதிக்கக் கூடாது. பயங்கரவாத நடவடிக்கைகள் குறித்து ரகசிய தகவல்களைப் பரிமாறிக் கொள்வதில்ஒத்துழைப்பு இருக்க வேண்டும்.

ஆகியன வெளிநாட்டு அமைச்சர்களால்சிபார்சு செய்யப்பட்டுள்ளது (ஒ)

## சிலியில் மேலும் நால்வர் கைது

சாஸ்தியாகோ, நவ.15

சிலி ஜனாதிபதி பினேஷ்சேயை கடந்த மாதம் கொலை செய்வதற்கு சதித்திட்டம் தீட்டினார்கள் என்ற சந்தேகத்தின் பெயரில் மேலும் நால்வரை சிலி பொலிஸார் கைது செய்துள்ளனர். (ஒ)

மாணவர்

## அரசியல் தடை யோசனைக்கு எதிர்ப்பு

டாக்கா, நவ.15

பங்களாதேஷில் மாணவர்கள் அரசியலில் ஈடுபடுவதை தடை செய்ய வேண்டும் என்ற ஜனாதிபதி ஏர்ஷாட்டின் யோசனைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல்வேறு அரசியல் அமைப்புகளும் மாணவர் ஸ்தாபனங்களும் இந்த எதிர்ப்பை வெளியிட்டுள்ளன.

அவாமி லீக் உட்பட ஏழு அரசியல் கட்சிகள் தனித்தனி அறிக்கைகள் மூலம் ஜனாதிபதி நடவடிக்கையை குறை கூறியதுடன் மக்கள் அதனை எதிர்க்க வேண்டும் எனவும் வற்புறுத்தின. (ஒ)

## தப்பி ஓட முயன்ற எட்டுக் கைதிகள் பலி!

ரேசில்லா, நவ. 15

சிறைச்சாலையிலிருந்து தப்பி ஓட முயன்ற எட்டு சிறைக் கைதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர். 10 பேர் படுகாயமடைந்தனர்.

இச் சம்பவம் வடகிழக்கு பிரேஸிலில் நேற்று இடம் பெற்றது.

கொள்ளைக் குற்றங்களுக்காக தண்டனை அனுபவிக்கும்இவர்கள்சிறைப் பாதுகாவலர்களை மடக்கி அவர்களது ஆயுதங்களைக் கைப்பற்றி சிறைச்சாலை நிர்வாக அதிகாரியை பணயமாகப் பிடித்து வைத்திருந்ததுடன், தாம் பாதுகாப்பாக வெளியேறுவதற்கு வாகன வசதியும் கோரியிருந்தனர்.

இவர்களுக்கு வழங்கப்பட்ட வாகனம் விபத்தில் சிக்கியதால் இவர்கள்மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. (ஒ)

## ஆர்ப்பாட்டமும் கறுப்புக் கொடியும்

பெங்களூர், நவ 15

வெளிநாட்டில் அமைந்துள்ள திபெத்திய தீவிரவாத அரசாங்கத்துக்கு அங்கீகாரம் வழங்கப்படல் வேண்டும் என்று ஆர்ப்பாட்டம் ஒன்றை பெங்களூரில் சார்க் மாநாடு நடைபெறும் இடத்தில் நடத்தவுள்ளதாக தீவிரவாத குழு அறிவித்தது.

சீனாவின் ஆக்கிரமிப்பைக் கண்டிக்கும் அறிக்கையொன்றையும் மாநாட்டு பிரதிநிதிகளுக்கு அவர்கள் கையளிப்பார்கள்.

இந்தியாவில் உள்ள தமிழ் போராளிகள் குழுக்கள் மாநாட்டில் கறுப்புக்கொடி காட்ட உத்தேசித்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

# சொர்க்க பாவனை
## மருவி 'சொக்கப்பானை'யானது
### கார்த்திகை விளக்கீடு இன்று

கார்த்திகை மாதத்தில் வருகின்ற கார்த்திகை நட்சத்திர தினத்தையே திரு என்னும் சிறப்பைக் கொடுத்துத் ''திருக் கார்த்திகை'' என சைவப் பெருமக்களால் கொண்டாடப் படுகின்றது.

சைவ மணங்கமழும் ஒவ்வொரு வீட்டிலும் இத் தினத்தில் தீபத்தை ஏற்றிவைத்து இறைவனை 'ஒளி' வடிவாக வழிபாடு நிகழ்த்தப்பெறும். சைவ ஆலயங்களிலும் 'சொக்கப்பானை' என்ற பெயரில் தீப ஒளி தரிசனம் விழாவாக நடைபெறும்.

'சொர்க்க பாவனை' என்பதே சொக்கப்பானை என்று மருவியதாக ஆன்றோர் பகர்வர். சர்வாலய தீபம் என்று எல்லாக் கோயில்களிலும் குமாராலய தீபம் என்று முருகன் கோயில்களிலும் விஷ்ணுவாலய தீபம் என்று திருமால் கோயில்களிலும் இவ்வுற்சவம் நடைபெறும்.

இத் தீப நாளைக் குறித்து ஒரு புராணக் கதையுண்டு.

'நானே பிரும்மம், நானே பிரும்மம்' என்று கூறி சிருஷ்டித் தொழிலைச் செய்யும் பிரமன் கர்வந் தலைக்கேறியவனாய் நின்றிருந்தான். 'யானே பெரியவன், யானே பெரியவன்' என்று கூறி காத்தற் றொழிலைச் செய்யும் விஷ்ணு மமதையுடன் நின்றிருந்தான்.

இவ்விருவருக்குமிடையில் 'யானே பெரியன்' என்ற விடயத்தில் பகைமை மூண்டது. அதனால் போர்உருவாயிற்று. இதனைக் கண்ணுற்ற சிவன் அவர்களின் அறியாமையை நீக்க எண்ணினான்.

ஆதியும் அந்தமும் இல்லாத இறைவன் ஜோதிஸ்வரூபனாய் ஒளிப்பிழம்பாக நின்றான். ''ஏ, பிரம்ம விட்டுணுக்களே! ஏன் வீணாக அடிபடுகின்றீர்கள். இந்த ஜோதியின் அடியையும் முடியையும் யார் காணுகின்றீர்களோ, அவர்தான் பெரியவர்'' என ஓர் அசரீரி வாக்குக் கேட்டது.

உடனே பிரம்மா அன்னப்பட்சி உருவங்கொண்டு முடியைத் தேடி வானிலே மேல் நோக்கி விரைந்தார். விஷ்ணுவோ பன்றியுருக்கொண்டு அடியைத் தேடி மண்ணிலே கீழ் நோக்கிச் சென்றார்.

கல்விக்கு அதிபதி சரஸ்வதி. அவளுக்கு அதிபதி பிரம்மா. ஆகவே அறிவு மேல்நோக்கிச் செல்கின்றது.

செல்வத்துக்கு அதிபதி லக்ஷ்மி. அவளுக்கு அதிபதி விஷ்ணு. ஆகவே செல்வப் புதையல் மண்ணுக்கு அடியில் தானிருக்கும். எனவே செல்வம் மண்ணுக்குள் கீழ் நோக்கிச் செல்கின்றது.

''வேதங்கள் ஐயா என ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே'' என்ற மணிவாசகர் வாக்கு இவண் நோக்கத்தக்கது.

பிரமாவினால்முடியைக் காண முடியவில்லை. இடையில் வந்த தாழம் பூவைக் கொண்டுவந்து சாட்சியாகக் . காட்டி முடியைக் கண்டதாகப் பிரஸ்தாபித்தார். பொய் சொன்ன காரணத்தால் பிரமாவுக்குக் கோயிலும் இல்லை. தாழம் பூவைப் பூசைக்கும் எடுப்பதில்லை.

விஷ்ணுவால் அடியைக் காணமுடியவில்லை. தன் இயலாமையை ஒப்புக் கொண்டார்.

இவ்வாறு பிரம விட்டுணுக்களின் ஆணவ அகங்காரம் அடங்கிய நாள்தான் இந்தக் கார்த்திகைத் தீபநாள்.

இறைவன் ஜோதியாக வடிவெடுத்து ஒளிமயமாகக் காட்சி தந்தார். 'சோதியே சுடரே சூழ் ஒளி விளக்கே', 'ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே', 'ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெருஞ் ஜோதி' என்ற திருமுறை வரிகள் இதனையே எடுத்தியம்புகின்றன.

திருவண்ணாமலையிலே இன்றும் இந்தத் தீபநாள் வெகு சிறப்பாகக்கொண்டாடப்படுகின்றது. மலையுச்சியிலே ஏற்றப்படும் விளக்கை பக்தர்கள் பலரும் பக்தியோடு பார்த்துப் பரவிப் பணிவார்கள்.

ஆணவ முனைப்பு நீங்கி ஆண்டவன் நினைப்பு வரவே இந்த திருக்கார்த்திகை விளக்கீடு வருகின்றது.

எல்லா மக்கள் மனதிலும் மாய இருளானது நீங்கி தூய ஒளியானது நிலைபெற கார்த்திகைத் தீபநாள் சிறக்கட்டும்.

✶ எஸ். சத்தியபாமா ✶

## சேதம் மதிப்பீடு

பருத்தித்துறை,நவ.16

பருத்தித்துறை,ஆதார வைத்தியசாலைக்கு ஏற்பட்ட சேதங்களை வைத்திய சாலை நிர்வாகமும் நோயாளர் நலன்புரிச் சங்கமும்மதிப்பீடுசெய்து வருகின்றன.

இது தொடர்பான புகார் யாழ். மாவட்ட சுகாதார அத்தியட்சர் ஊடாக யாழ்மாவட்ட அரசாங்க அதிபருக்கு தெரிவிக்கப் பட்டுள்ளது. (இ-118)



பொய்யாமொழி

**குறள்:**

இணர்எரி தோய்வன்ன இன்னா செயினும்
புணரின் வெகுளாமை நன்று.

**பொருள்:**


பல சுடர்களை உடைய பெரு நெருப்பில் தோய்வது போன்ற துன்பத்தை ஒருவன் செய்த போதிலும், கூடுமானால் அவன் மேல் சினங் கொள்ளாது இருத்தல் நல்லது.

## உங்கள் விண்ணப்பங்கள் கேட்கப்படவேண்டுமா?

அப்பொழுது அவர்கள் கூப்பிடுகிறதற்கு முன்னே நான் மறு உத்தரவு கொடுப்பேன்''. (ஏசா 65:24)

உங்கள் ஜெபங்களுக்கெல்லாம் கர்த்தர் பதிலளிக்க வேண்டுமா? உங்கள் விண்ணப்பங்கள் கேட்கப்பட வேண்டுமா? இதோ ஐந்து படிகள்;

1. தாழ்மையுடன் கேளுங்கள்:- 'என் நாமந்தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி ஜெபம் பண்ணி, என் முகத்தைத் தேடி, தங்கள் பொல்லாத வழிகளை விட்டுத் திரும்பினால் அப்பொழுது பரலோகத்திலிருக்கிற நான் கேட்டு,



அவர்கள் பாவத்தை மன்னித்து, அவர்கள் தேசத்துக்கு க்ஷேமத்தைக் கொடுப்பேன்' (நாளா 7:14)

2. முழு இருதயத்தோடும் கேளுங்கள்:- 'உங்கள் முழு இருதயத்தோடும் என்னைத் தேடினீர்களானால் என்னைத் தேடுகையில் கண்டுபிடிப்பீர்கள்' (எரே 29:13)

3. விசுவாசத்தோடு கேளுங்கள்:- 'நீங்கள் ஜெபம்பண்ணும்போது எவைகளைக் கேட்பீர்களோ, அவைகளைப் பெற்றுக் கொள்வோம் என்று விசுவாசியுங்கள்; அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாயிருக்கும் என்று உங்களுக்குச் சொல்கிறேன்'. (மாற்கு 11:24)

4. குற்றங்களை அறிக்கை செய்து கேளுங்கள்:- 'உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர்

ஞானக்கதிர்

அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம் பண்ணுங்கள். நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது'. (யாக் 5:16)

5. கீழ்ப்படிந்து கேளுங்கள்:- 'அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொண்டு அவருக்கு முன்பாக பிரியமானவைகளைச் செய்கிறபடியினால் நாம் வேண்டிக் கொள்கிறதெதுவோ அதை அவராலே பெற்றுக் கொள்கிறோம்'. (யோவான் 3:22)

## ஜெயரத்தினம் நினைவு விழா

யாழ்ப்பாணம், நவ. 16

தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியில் ஜெயரத்தினம் நினைவு விழாவும் பரிசில் வழங்கலும் அண்மையில் நடைபெற்றன.

பிரதம விருந்தினராக சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியும் சிறப்பு விருந்தினராக திரு. எஸ். சிவலிங்கராசாவும் கலந்து கொண்டனர்.

வள்ளி தெய்வானை நாடகமும், பாடசாலை மாணவிகளின் சங்கீத இசை நிகழ்ச்சியும், சிறுவரின் நடன நிகழ்ச்சியும், சிறப்பு நிகழ்ச்சியாக செல்வி இராஜலக்ஷ்மி நடராஜாவின் நெறியாள்கையில் அமைந்த முரண்பாடுகள் நாட்டிய நாடகமும் இடம்பெற்றன.

இதில்அடவுகளும் அபிநயங்களும் பலரது பாராட்டையும் பெற்றன. (ஒ)

சமய சந்திகளில்

## திருக்கார்த்திகை தீபவிழா

யாழ்ப்பாணம், நவ.16

செந்தில் கதிர் வேலாயுத சுவாமி ஆலயத்தில் இன்று திருக்கார்த்திகையையொட்டி காலை 9 மணிக்கு முருகப் பெருமானுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெறும்.

நண்பகல் 12.30 மணியளவில் அன்னதானம் (மஹேஸ்வர பூஜை) வழங்கப்படும்.

மாலை 5 மணியளவில் முருகப்பெருமான் வள்ளி தேவசேனாதிபதி சமேதராய் வீதி வலம் வரும் காட்சியும் இடம்பெறும்.

கிரியைகள் யாவும் பிரம்மஸ்ரீ நாராயணக் குருக்கள் தலைமையில் நடைபெறும். (இ)

## நவக்கிரக பிரதிஷ்டை

மானிப்பாய், நவ. 16

உடுவில் ஸ்ரீ சிவஞானப் பிள்ளையார் தேவஸ்தானத்தில் புதிதாக நவக்கிரக பிரதிஷ்டை செய்யப்பட்டு மகா கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது.

ஆலய ஆதீன கர்த்தா பிரம்மஸ்ரீ வா. முத்துக்குமாரசாமி சர்மா தலைமையில் சுன்னாகம் மயிலணி பிரம்ம ஸ்ரீ சா. சோமாஸ்கந்த குருக்கள், சங்குவேலி பிள்ளையார் ஆலய பிரதம குருபிரம்ம ஸ்ரீ வா. பாலசுப்பிரமணியக் குருக்கள், சுன்னாகம் பிரம்மஸ்ரீஎஸ்.சோமாஸ்கந்தக் குருக்கள் ஆகியோர் நூதன நவக்கிரக கும்பாபிஷேகத்தை நிகழ்த்தினர்.

சிவன், அம்மன் சிலைகளுக்கும் மருந்து சாத்தப்பட்டு, மகா கும்பாபிஷேகம் செய்யப்பட்டதுடன் புதிதாக நந்திகேஸ்வரர் சிலையும் வைக்கப்பட்டு அதற்கும் அபிஷேகம் நிகழ்த்தப்பட்டது. (இ-90)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

COMPUTER PROGRAMMING
Basic Language
6 Months — Weekends Classes
**Cantabia Institute**
21, Main Street, Jaffna.
T'Phone: 24201

# உதயன்

16 - 11 - 1986 ஞாயிற்றுக்கிழமை

COMPUTER PROGRAMMING
Learn from the pioneers in computer education
Fees/ 1500/- (payable in installments)
Practicals in fully air conditioned environment for not less than 60 hours
**Cantabia Institute**
21, Main Street, Jaffna.
T'Phone: 24201

# மலையக மக்களுக்காகவும் போராடுங்கள்

## போராளிகளுக்கு பெர்ணாண்டோ அழைப்பு

யாழ்ப்பாணம், நவ. 16
மலையக மக்களின் உரிமைகளுக்காகவும் போராளிகள் போராட வேண்டும்.

'எழுக மலையகம்' முத்திரை வெளியீட்டு விழாவில் கலந்துகொண்ட இலங்கை ஆசிரியர் சங்கத் தலைவர் திரு. எச். என். பெர்ணாண்டோ இவ்வாறு அழைப்புவிடுத்தார்.

சிங்களத்தில் இவர் உரையாற்றினார். உரை தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது.

எமது நாட்டின்பெரும் பகுதி பொருளாதாரத்தை வகுத்துத் தருபவர்கள் மலையக மக்களே.

எனினும் ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கமே அவர்களது பிரஜா உரிமையையும் வாக்குரிமையையும் பறித்தது.

இந்த நாட்டின் ஏனைய பெண்களின் தரம் வளர்ச்சி அடைந்துள்ள போதிலும் மலையகப் பெண்களின் தரம் மோசமான நிலையிலேயே உள்ளது.

தென்னிலங்கை வாசியான நான் உங்களிடம் வேண்டுவது என்னவெனில் மலையக மக்கள் விமோசனம் பெறவேண்டுமானால் அதற்காக எமது போராளிகள் போராடவேண்டும்.

சமாதான பேச்சு நடத்திக்கொண்டிருக்கும் ஜே. ஆர். ஆட்சி மறுபுறம் போராளிகளை நசுக்கவும் முற்படுகிறது.

இதற்காகவே இந்த வருட வரவு செலவுத் திட்டத்தில் இருந்து அமைச்சர் ஞானிடிமெல் அதிக தொகைப் பணத்தை ஒதுக்கி உள்ளார்.

இப்படி அவர் சொன்னார். (இ-10)

## எம். ஜி. ஆர். முயற்சி?

சென்னை, நவ. 15
தமிழ்ப்போராளிகளிடமிருந்துகைப்பற்றப்பட்ட ஆயுதங்களை மீண்டும் அவர்களிடமே ஒப்படைக்க வேண்டும்என்றமுயற்சியில் தமிழக முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரன் தீவிரமாக ஈடுபட்டிருப்பதாக பேச்சுக்கள் நிலவுகின்றன.

இப்படி சென்னையில் இருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (இ-எ)

## பரீட்சைகள் நாளை ஆரம்பம்

பலாலி, நவ. 16
யாழ் கல்வித் திணைக்களம் நடத்தும் 1986ம் ஆண்டுக்கான ஆண்டிறுதிப் பொதுப் பரீட்சைகள் நாளைதிங்கட்கிழமை தொடங்கவுள்ளன.

நாளை ஜீ. சி. ஈ. சாதாரண வகுப்பு (11ஆம் ஆண்டு) களுக்கு பரீட்சை ஆரம்பமாகி 21ஆம்திகதி முடிவடையும்.

தொடர்ந்து 25ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆண்டுகள் 7, 8, 9, 10 ஆகியவற்றிற்குரிய பரீட்சைகள் ஆரம்பமாகும். இவை டிசம்பர் முதலாம் திகதி முடிவடையும்

டிசம்பர் ஐந்தாம்திகதி வெள்ளிக்கிழமை பாடசாலைகள் மூன்றும்தவணை விடுமுறைக்காக மூடப்படும். (இ-119)

## ஆனையிறவு முகாமிலிருந்து வெளியேற முயன்ற சிப்பாய்கள் புலிகள் எதிர்த்தாக்குதல்

யாழ்ப்பாணம், நவ. 16
வெள்ளிக்கிழமை இரவு 9 மணி அளவில் ஆனையிறவு இராணுவ முகாமில் இருந்து வெளியேற முயன்ற சிப்பாய்களை நோக்கி தமிழீழ விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர்.

ஆறு அங்குல மோட்டார்த் தாக்குதல்களும் துப்பாக்கிப் பிரயோகமும் சிப்பாய்களை நோக்கி மேற்கொள்ளப் பட்டன

இதன் காரணமாக சிப்பாய்கள் பின்வாங்கிச்சென்று இயக்கச்சிப் பக்கமாக காலை மூன்று மணி அளவில் மோட்டார்த் தாக்குதல் மேற்கொண்டனர்

சிப்பாய்கள் தரப்பில் ஏற்பட்ட சேதம்பற்றி தெரியவில்லை என புலிகள் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது (இ-10)

## இரு கமாண்டோக்கள் காயம்

## கிரனைட் வீசிவிட்டு சயனைட் உட்கொண்ட போராளி

### திருக்கோவிலில் சம்பவம்

யாழ்ப்பாணம், நவ. 16
அம்பாறை திருக்கோவில் முகாமில் இருந்து வெளியேறி 50க்கும் மேற்பட்ட இராணுவ கமாண்டோக்கள் நடந்து வந்துகொண்டிருந்த சமயம் விடுதலைப் புலி வீரர் ஒருவர் கிரனைட் எறிந்து தாக்குதல் நடத்தினார்.

இத்தாக்குதலினால் கமாண்டோக்கள் இருவர் தலையில் பலத்த காயங்களுக்கு உள்ளானார்கள்.

கமாண்டோக்களின் தாக்குதலுக்கு உள்ளாகிய விடுதலைப் புலி வீரர் புண்ணியன் சயனைட் அருந்திவீர மரணமடைந்தார்.

இம் மோதலில் மரணம் அடைந்த புண்ணியனுக்கு புலிகள் தமது வீர வணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றனர். (இ-10)

## சம்பூரில் மாதிரிக் கிராமம்

திருகோணமலை, நவ.16
வன்செயல்களில் வீடிழந்த தமிழ் மக்களுக்கு என்று சம்பூரில் மாதிரிக் கிராமம் ஒன்றை அமைக்கும்படி சம்பூர் கிராமோதய சபைத் தலைவர் திரு. வ. கைலாயபிள்ளை கோரிக்கைவிடுத்து இருக்கின்றார்.

மூதூர்த் தொகுதியில் சம்பூர், சேனையூர், கூனித்தீவு ஆகிய கிராமங்களில் அண்மையில் ஏற்பட்ட அசம்பாவிதங்களில் 947 வீடுகள் முற்றுகச் சேதமடைந்தன.

இவ் வீடுகளில் வாழ்ந்தவர்கள் அனைவரும் அகதி முகாம்களில் தங்கியுள்ளனர்

இவர்களின் நன்மை கருதியே மாதிரிக் கிராமம் ஒன்றை சம்பூரில் அமைக்கும்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (இ-150)

## முன்னாள் அரச அதிகாரி கடத்தல் விவகாரம்

# கொழும்பு பல்கலைக்கழக பேராசிரியர் உட்பட ஐவர் கைது

கொழும்பு, நவ. 16
சிங்களப் பெண்ணை மணந்த தமிழரான முன்னாள் அரசாங்க அதிகாரி ஒருவரை யாழ் மாவட்டத்தில் வைத்துக் கடந்த மார்ச் மாதம் கடத்தியதாகக் கூறப்படும் சம்பவம் ஒன்று தொடர்பாக கொழும்புப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் ஒருவரும் வேறு நால்வரும் வெள்ளவத்தைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

கடந்த வியாழக்கிழமை கைது செய்யப்பட்ட இவர்கள் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

கடத்தப்பட்ட அந்த முன்னாள் அதிகாரியை விடுவிக்க ஐந்து லட்சம் ரூபா கடத்தல்காரர்களினால் கோரப்பட்டது என்றும் அவரின் மனைவி ஒரு லட்சம் ரூபாவும் நகைகளும் கொடுத்த பின்னரே அவர் விடுதலை செய்யப்பட்டதாகவும் பொலீஸாருக்கு முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஆனால் கடத்தியவர்களில் ஒருவர் என்று கருதப்படுபவரை அந்த ஓய்வுபெற்ற மோட்டார் வாகனப் பரிசோதகர் கடந்தவாரம் கண்டு பொலீஸுக்குத் தகவல் கொடுத்தார்.

அந்த நபர் வசிக்கும் வீட்டை வெள்ளவத்தைப் பொலீஸார் முற்றுகை இட்டு, வீட்டின் உரிமையாளரான பிரஸ்தாப பேராசிரியரையும் வேறு நால்வரையும் கைது செய்தனர்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் அனைவருக்கும் தடுப்புக் காவல் உத்தரவு வழங்கப்பட்டது.

வெள்ளவத்தையில் பெரிய வீடு ஒன்றில் இப்போராசிரியர் வசித்து வருகின்றார். ஒரு மகள் அவருடன் வசித்து வருகிறார். மனைவியும் ஏனைய பிள்ளைகளும் வெளிநாட்டில் தங்கியிருக்கின்றனர்.

பொலீஸுக்கு அளித்த வாக்குமூலத்தில் ''யாழ்ப்பாணத்தில் இருந்து வருபவர்கள் தங்குவதற்கு அறைகளை நான் வாடகைக்குக் கொடுத்து வந்தேன்'' என்று பேராசிரியர் தெரிவித்திருக்கின்றார். (இ – எ)

The Best in Jaffna.
for,
Food,
Service,
Comfort
At
**R·S·R·**
GREEN PEKING
PALACE
Open 9 a. m.
to
11 p. m.
4th Cross Street,
JAFFNA
Phone: 23873

## சுன்னாகத்தில் சசிபாரதி பாராட்டு விழா

சுன்னாகம், நவ. 16
'சசிபாரதி' திரு. எஸ். சபாரத்தினத்தின் சேவையைப் பாராட்டும் விழாவும் ''சசிபாரதி கதைகள்'' நூல் அறிமுக விழாவும் இன்று சுன்னாகம் பல. நோ. கூ. சங்க கலாசார மண்டபத்தில் நடைபெறுகின்றன.

திரு. சி. குமரவேல் தலைமையில் நடைபெறும் விழாவில் துர்க்கா துரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டியும், சுன்னாகம் பங்கு தந்தை அருட்திரு யோகராசா அடிகளாரும், ஆசியுரை வழங்குவார்கள்.

விழாவின் பிரதம விருந்தினர்களாக சுன்னாகம் பிரஜைகள் குழுவின் தலைவரும், முன்னாள் கல்விப் பணிப்பாளருமான திரு. தி. மாணிக்கவாசகரும், வலி – தெற்கு உதவி அரச அதிபர் திரு. ஆ. மகாலிங்கமும் கலந்து சிறப்பிப்பார்கள்.

வரவேற்புரையை திரு. சபா புஷ்பநாதனும் நூல் அறிமுக உரையை 'சிற்பி' திரு. சி. சரவணபவனும் திரு த திருநாவுக்கரசும் (நாவேந்தன்) நிகழ்த்துவர். (இ-27)

## நூல் வெளியீட்டு விழா

வட்டுக்கோட்டை, நவ. 16
வட்டுக்கோட்டை கலா நிலைய முதல்வரும் முன்னாள் அதிபரும், பலாலி ஆசிரிய கலாசாலை முன்னாள் ஆங்கில விரிவுரையாளருமான திரு. க. கயிலாயநாதனின் ''அருணகிரி வருணனையில் அநுபூதி'' என்னும் நூல் வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணியளவில் முன்னாள் அதிபர் பண்டிதர் க. சபா ஆனந்தர் தலைமையில் இணுவில் கந்தசுவாமி ஆலயத்தில் நடைபெறும்.

யாழ். இந்துக் கல்லூரி ஆசிரியர் பண்டிதர் ச. வே. பஞ்சாட்சரம் நூல் வெளியீட்டுரை நிகழ்த்துவார்.

இணுவில் கந்தசுவாமி கோயில் இளந்தொண்டர் சபை ஆலோசகர் திரு. ந. பரமேஸ்வரன் நன்றியுரை நிகழ்த்துவார். (இ-161)

## இராணுவ தாக்குதல் பாதுகாப்பு

# முல்லைத்தீவு பகுதியில் ஈ. பி. ஆர். எல். எவ். வேண்டுகோள்

முல்லைத்தீவு, நவ. 16
இராணுவத் தாக்குதல்களில் இருந்து பாதுகாத்துக் கொள்ள மக்கள் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி இவ்வாறு முல்லைத்தீவுப் பகுதியில் கிராமம் தோறும் வேண்டுகோள் விடுத்து வருகிறது.

கடந்த வியாழன் இரவு வாகனங்களில் பூட்டப்பட்ட ஒலிபெருக்கி சாதனங்கள் மூலம் முல்லைத்தீவு, முள்ளியவளை, வற்றுப்பளை, குமுழமுனை, செம்மலை ஆகிய கிராமங்களில் இவ்வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

வீதிகளில் கூட்டமாக நின்று உரையாடுவதைத் தவிர்க்கும் படியும் பொதுமக்கள் கோரப்பட்டனர். (இ-எ-92)

## ஒத்திவைப்பு

வல்வெட்டித்துறைநவ16
சென்னையில் தமிழ்ப் போராளித் தலைவர்கள் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளதை ஆட்சேபித்து சனிக்கிழமை வடமராட்சிப் பகுதியில் நடைபெறவிருந்த கடை அடைப்பு, வீதித்தடை, பகிஷ்கரிப்பு போன்ற நடவடிக்கைகள் ஒத்திவைக்கப்பட்டன.

இவற்றை ஈரோஸ் இயக்கம் ஒழுங்கு செய்திருந்தது மேலிடத்தின் உத்தரவின் பேரில் இவை ஒத்திவைக்கப்பட்டன என்று பின்னர் அறிவிக்கப்பட்டது.

இதற்குப் பதிலாக மண்டான், பருத்தித்துறை, நெல்லியடி போன்ற இடங்களில் பொதுக் கூட்டங்கள் மட்டும் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது. (இ-எ-160)

## சீட்டிழுப்பு ஒத்திவைப்பு

முல்லைத்தீவு ஐக்கிய விளையாட்டுக் கழகத்தினால் 15-11-86 இல் அதிஷ்டம் பார்க்கப்படவிருந்த சீட்டிழுப்பு 20-11-86 இல் முல்லைத்தீவு மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெறவிருக்கும் உதைபந்தாட்ட இறுதிப் போட்டியின் இறுதியில் நடைபெறும்

கழக நிர்வாக சபை

## 6 மாதக் கர்ப்பிணி பாம்பு தீண்டி மரணம்

வட்டுக்கோட்டை, நவ. 16
கட்டட ஒப்பந்தக்காரரான தமது கணவருக்கு சாப்பாடு சமைத்துக் கொடுத்துவிட்டு காலை 10 மணியளவில் நித்திரையில் ஆழ்ந்திருந்த ஆறுமாதக் கர்ப்பவதியான இளம்பெண் ஒருவர் விஷப்பாம்புக் கடிக்கு இலக்காகி மரணமானார்.

இப்பரிதாப சம்பவம் சித்தன்கேணி கலைநகரில் இடம்பெற்றது.

திருமதி ரோகினி அனந்த லோகேஸ்வரன் (22 வயது) என்பவரே இறந்தவர் ஆவார்.

பாம்பு கடித்த இப்பெண்ணை உள்ளூர்வைத்தியர்கள் இருவரிடம் காட்டியபோது அவர்கள் மூளாய்க்குக் கொண்டுபோகும்படி கூறினார்கள்.

மூளாய் ஆஸ்பத்திரி டாக்டர் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகும்படி கூறினார்.

உடனே யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டு ஆஸ்பத்திரியில் இப்பெண்சேர்க்கப்பட்டார்.

ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிறிதுநேரத்தில் இப்பெண்ணின் உயிர் பிரிந்தது. (இ-161)

## விற்பனைப் பிரதிநிதிகள் தேவை

அதிஷ்டலாபச் சீட்டு விற்பனை செய்ய பின்வரும் தொகுதிகளில் உள்ள ஆண், பெண் இரு பாலாரும் உடனடியாகத் தேவை

| | |
|---|---|
| 1. யாழ்ப்பாணம் | 7. சுன்னாகம் |
| 2. மானிப்பாய் | 8. இணுவில் |
| 3. சங்கானை | 9. தெல்லிப்பளை |
| 4. பண்டத்தரிப்பு | 10. காங்கேசன்துறை |
| 5. வட்டுக்கோட்டை | 11. அராலி |
| 6. காரைநகர் | |

★ ★

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி;

**ஸ்ருடியோ வீனஸ்**
(சிறீதர் சினிமா அருகாமையில்)
266/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

## பஜனாவளி வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், நவ. 16
அமரர் தம்பு விஸ்வப்பாவின் இரண்டாம் ஆண்டு நினைவு தினத்தை ஒட்டி பஜனாவளி நூல் வெளியீட்டு விழா நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் எதிர்வரும் சனிக்கிழமை(22-11-86) காலை 10 மணியளவில் நடைபெறும்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக பரமாசாரிய ஸ்வாமிகள் தலைமை வகிப்பார்.

பிரதம அதிதியாக பருத்தித்துறை ஸ்ரீஇராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம முதல்வர் தவத்திரு சுவாமி சித்ருபானந்தா கலந்து கொள்வார்.

பிரபல தொழிலதிபர் திரு. க. கனகராசா தொடக்கவுரை நிகழ்த்துவார்.

ஆத்மஜோதி முத்தையா அவர்கள் வெளியீட்டுரையை நிகழ்த்துவார். (இ-எ)

## சார்க் - - -

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வந்தடைந்தனர்.

நேபாளம், பூட்டான் நாடுகளின் மன்னர்கள் பெங்களூர் சென்றிருக்கின்றனர்.

பாகிஸ்தான் சார்பாக ஜனாதிபதிக்கு பதில் பிரதமர் ஜுனஜோ கலந்து கொள்கின்றார்.

உச்சிமாநாடுகர்நாடக சட்டசபையின் விதான் சௌதா மண்டபத்தில் இன்று காலை ஆரம்பமாகிறது.

நாளையுடன் இம் மாநாடு முடிவடைகின்றது.

நாளை திங்கள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி செய்தியாளர் மாநாட்டில் உரைநிகழ்த்துவார்.

'சார்க்' அமைப்பின் தலைமைப்பதவியை ஏற்ற பின்னர் இந்தியப் பிரதமர் நடத்தவிருக்கும் முதலாவது செய்தியாளர் மாநாடு இதுவாகும். (இ-எ)

## பருத்தித்துறை: தாக்குதல்

யாழ்ப்பாணம், நவ. 16
பருத்தித்துறை இராணுவ முகாமில் நேற்றுக் காலை எட்டுமணி அளவில் வெளியேற முயற்சித்த சிப்பாய்களை நோக்கி விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர்.

புலிகளின் தாக்குதலால் முகாம் திரும்பிய சிப்பாய்கள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

இதில் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த போராளி ஒருவர் காயமடைந்தார். (இ-10)

## அவர்கள்-

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றைத் தாக்கினர்.

சுமார் ஐநூறுக்கும் மேற்பட்ட கடற்படையினரும், இராணுவத்தினரும் படகுகள் மூலமும் கப்பல்கள் மூலமும் வந்து இறங்கி இப்பகுதியைச் சுற்றிவளைத்துச்சோதனையிட்டனர். அப்போதே புலிகளின் பழையமுகாம் தாக்கப்பட்டுச் சேதப்படுத்தப்பட்டது. (இ-10)

## காயமடைந்த இருவர் மரணம்

யாழ்ப்பாணம்,நவ. 16
கடந்த வாரம் வல்வை அச்சுவேலி, உடுப்பிட்டி பகுதிகளில் நடைபெற்ற ஹெலிக்கொப்டர் தாக்குதல்களின்போது காயமடைந்து யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டவர்களில் இருவர் நேற்றும் நேற்று முன்தினமும் மரணமானார்கள்.

ஞானப்பிரகாசம் தேவசகாயம் (50 வயது)அச்சுவேலி; இராசம்மா (82 வயது) உடுப்பிட்டி ஆகிய இருவருமே மரணமானவர்கள் ஆவர்.

இவர்களின் மரண விசாரணையை யாழ் திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. க. கேசவன் நடத்தினார் (இ-10)

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

இளவல்களின் அறிவுப்பசிக்கு
விருந்து படைக்க
வந்துவிட்டான்!
" அர்ச்சுனா"
★ அறிவுலக அறிமுகம்
★ கணிதப்புதிர்
★ எண் சிலம்பம்
★ பயணம் தந்த பாடம்
★ சிந்தனைக் கட்டுரைகள்
★ குட்டிக் கதைகள்
★ கருத்தோவியகள்
★ கணணி நிகழ்ச்சித் திட்டம்
★ சிந்தனைக் கருவூலங்கள்
உதயன் நிறுவனம் வழங்கும்
"மற்றொரு பரிசு"
அர்ச்சுனா
(திங்கள் இதழ்)
கண்கவர் வர்ண அட்டைப் படத்துடன்
அர்ச்சுனா விற்பனையாகின்றான்
நமது விநியோகஸ்தர்களிடம்
கேட்டு வாங்குங்கள்.
விலை ரூபா 3-00 மட்டுமே

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி, இரண்டாம் ஒழுங்கை 15 - ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி: 16 - 11 - 1986.

Printed and Published by Uthayan Pubilcations (Private) Ltd, 15 Second Lane, Power House Road, JAFFNA.

Registered as a Newspaper at the General Post Office. Sri Lanka Under Number QJ 60: N 86

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org